மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தொழில் மையங்களை உருவாக்குவது என்பது, அந்தந்தப் பகுதியினுடைய தேவையைப் பொறுத்தும், அதேநேரத்தில் அந்தத் தொழில் உருவாக்கும் திட்டத்துடன் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழில் முனைவோர்களும் அதற்கு மேலும் தொழில் தொடங்க முன்வரும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையோடு அந்தப் பகுதிகளில் தொழில் மையம் தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

4—

உதவித் தொகை

***7375—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாற்றுத் திறனாளிகள் தங்களது உதவித் தொகையை எளிதாகவும், உடனடியாகவும் பெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாற்றுத் திறனாளிகளின் பாதுகாவலராக விளங்குபவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தித் தந்தவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சிக் காலத்திலே பண அஞ்சல் மூலமாக, அதாவது money order மூலமாக உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. இம்முறையினால் ஏற்படுகின்ற காலதாமதத்தைத்

2013 பிப்ரவரி 5]

தவிர்த்து இந்தத் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்தி மாற்றுத்திறனாளிகள் அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை எளிமையாகவும், உடனடியாகவும் பெற வேண்டுமென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மின்னணு மூலமாக பயனாளிகளின் வங்கிக் கணக்கிலேயே வரவு வைக்கப்பட்டு, பயனாளிகளுக்கு நேரடியாகப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு, உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற வைர வரிகளுக்கு இலக்கணமாக, மக்களாட்சி செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தியும், உதவித் தொகை உடனடியாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்துள்ள தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

வாழை ஆராய்ச்சி நிலையம்

***21022—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?